# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

---

## செய்தி வெளியீடு

<u>செய்தி வெளியீடு எண். 3/2011</u> <u>நாள் 20.09.2011</u>

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் கூட்ட அரங்கில் தேர்தல் முன்னேற்பாடு குறித்து மாநில தேர்தல் அலுவலர்களுடனான கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (20.09.2011) மாலை 4.00 மணியளவில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர். சோ. அய்யர், இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்கண்டுள்ள பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

1. மாநில தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள வரைவு செயல் திட்டத்தின்படி முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் கண்காணித்தல்.

2. மாநில தேர்தல் அலுவலகங்களிலிருந்து தேர்தல் பணி ஒருங்கிணைப்பு அலுவலர்களை நியமித்தல்.

3. தேர்தலுக்கான நிதி ஆதாரங்கள்.

4. தேர்தல் அலுவலர்களுக்கான பயிற்சிகள்

5. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வாக்காளர் பட்டியலின் பிரதிகளை வழங்குதல்.

6. தேர்தல் தொடர்பான உள்ளாட்சி அலுவலர் பதவியிடங்களை முழுமையாக நிரப்புதல் மற்றும் மாற்று ஏற்பாடுகள்.

7. வாக்குப் பதிவு, வாக்கு எண்ணுகை தொடர்பான தகவல்களை உடனுக்குடன் தெரிவிப்பதற்கான வழிவகைகள்.

8. வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கு உடனடி தகவல் பரிமாற்றத்திற்காக Sim Card வழங்குதல்

9. பதற்றமான வாக்குச் சாவடிகளில் வீடியோ கேமிரா மூலம் வாக்குச் சாவடி நிகழ்வுகளை பதிவு செய்தல்.

10. மண்டல அலுவலர்களுடன் வீடியோ கேமிரா பதிவாளரை பணியமர்த்துதல்.

11. வாக்காளர்களுக்கான வாக்குச் சாவடி துண்டு சீட்டுகளை (Booth slips) தயாரித்து அலுவலர்கள் மூலம் மட்டுமே விநியோகித்தல்.

12. வாக்குச்சவாடி பட்டியல்களை முறையாக விளம்பரப்படுத்துதல்.

13. அனைத்து வாக்கு எண்ணுகை மையங்களிலும் வீடியோ கேமிரா மூலம் நிகழ்வுகளை பதிவு செய்தல்.

14. வாக்கு எண்ணுகை முடிவுகளை கணிணீ மூலம் ஒருங்கிணைக்க Data Operator- களை பயன்படுத்துதல்.

நடைபெறவுள்ள சாதாரணத் தேர்தல் தொடர்பான அனைத்து முன்னேற்பாடு பணிகளை குறித்தும் மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. திருச்சி மாநகராட்சி தொடர்பான வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுவதால், நீதிமன்றத் தீர்ப்பு வரப்பெற்றவுடன் தேர்தல் அறிவிக்கை குறித்து முடிவு செய்திடலாம் என கருத்துக்கள் பெறப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செயலாளர் திரு. வே.மு. சேவியர் கிறிசோ நாயகம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் முனைவர் எஸ். விஜயகுமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. சந்திரகாந்த் காம்ப்ளே, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. எம். சந்திரசேகரன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் டி. கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் இதர அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி
மக்கள் தொடர்பு அலுவலர்